# 31. சிகிவாகனன்

கட்டளைக் கலித்துறை

புனலை மலைந்து நடித்தவர் வாக்குப் புகனெறியே
சனன மொழிக்கு மதரறி விக்குமொர் சாமியெனக்
குனையல திந்த வுலகினர் யாரு முரைப்பதென்னின்
மனது திருத்தி யடையாது காண்சிகி வாகனனே.

புனலை மலைந்து நடித்தவர் வாக்குப் புகல் நெறியே
சனனம் ஒழிக்கும் அதர் அறிவிக்கும் ஓர் சாமி எனக்கு
உனை அலது இந்த உலகினர் யாரும் உரைப்பது என்னின்
மனது திருத்தி அடையாது காண் சிகிவாகனனே.

மயில்வாகனனே! கடல் அலையுடன் பொருது நடனம் செய்த கந்தவேளின் திருவாக்குக் கூறும் நெறியே பிறப்பை ஒழிக்கும் வழியை அறிவிக்கும். ஒப்பற்ற குருசாமி எனக்கு உன்னை அல்லாமல் இந்த உலகில் உள்ளவர் யாரேனும் உரைப்பதென்றால் என் மனம் திருத்தி அடையாது! 1

"பிறவியை ஒழிக்கும்படியான உறுதி உபதேசம் எனக்கு இவ்வுலகினர் உரைப்பதென்றால் என் மனசு திருப்தியடையாதன்றே. அவ்வுபதேசத்தை நீயே உரைத்தருளல் வேண்டுமென வேண்டி நின்றமை இத்திருப்பாடலிற் காணப்படுகிறது. அது பெற்றவாறு நூலுள் யாண்டு யாண்டுக் கூறப்படுமோ ஆண்டாண்டறிந்து கோடல் அறிவுடைமையே!" (பாம்பன் சுவாமிகள்).

**பொருள்பெற வென்றிரும் பொய்பல பேசிப் பொறிதணந்த**
**மருள்பிடித் தாடு மடவர்தங் கேண்மை மறந்துநித்த**
**அருளை நினைத்தவ் வருள்பெற வந்த வருண்முதனீ**
**வரும்வைக றானதி தூரங்கொ லோசிகி வாகனனே.**

பொருள் பெற என்று இரும் பொய் பலபேசிப் பொறி தணந்த
மருள் பிடித்து ஆடும் மடவர்தம் கேண்மை மறந்து நித்தம்
அருளை நினைத்து அவ் அருள் பெற வந்த அருள் முதல் நீ
வரும் வைகல் தான் அதிதூரம் கொலோ சிகிவாகனனே.

மயில்வாகனனே! பொருளைத் தேடிக் குவிக்க வேண்டு மென்னும் பேராசையால் பல பொய்கள் பேசி, அறிவு நீங்கிய மயக்கம் பிடித்தாடும் அறிவிலார் தம் நட்பை மறந்து நாள்தோறும் உன் அருளை நினைத்து, அந்த அருள் நான் பெற வந்த அருளின் தலைவனாகிய நீ வரும் நாள்தான் அதிக தூரமோ? 2

**பாசத்தை நீத்தரு ளுன்னடிக் காய பரிவுகொண்டு**
**தாசத் தொழிற்செயுஞ் சீடனென் றாக்கித் தழைத்தபஞ்ச**
**கோசத்தை நூறி யெனைக்கொளும் போது குருபணிக்கும்**
**மாசற்ற நின்னரு ளேநிற்க வான்சிகி வாகனனே.**

*பாசத்தை நீத்து அருள் உன் அடிக்கு ஆய பரிவு கொண்டு*
*தாசத் தொழில் செய்யும் சீடன் என்று ஆக்கித் தழைத்த பஞ்ச*
*கோசத்தை நூறி எனைக் கொளும் போது குருபணிக்கும்*
*மாசு அற்ற நின் அருளே நிற்க வான் சிகி வாகனனே.*

உயர்ந்த மயில்வாகனனே! பந்த பாசங்களை ஒழித்து அருளும் உன் திருவடிக்கான அன்பு கொண்டு, அடிமைத் தொழில் செய்யும் சீடன் என ஆக்கித் தோன்றிய அன்னமயகோசம், பிராணமயகோசம், மனோமயகோசம், விஞ்ஞான மயகோசம், ஆனந்த மய கோசம் எனும் பஞ்சகோசத்தை அழித்து, நீ என்னைக் கொள்ளும்போது, குருவின் தொண்டனுக்கும் மாசற்ற உனது அருள் துணையாக இருப்பதாக! 3

**ஆத்தர்சொல் லானு மெணுமனத் தானு மளக்கவொண்ணாப்**
**பூர்த்தி யெனப்படும் வானவ னாமுனைப் போற்றியுய்வான்**
**சேர்த்த பரிசுத்த நாமங்க ளாயிரஞ் செப்பியுநல்**
**வார்த்தைக ளானும் புகழ்வரன் றோசிகி வாகனனே.**

*ஆத்தர் சொல் லானும் எணும் மனத்தானும் அளக்க ஒண்ணாப்*
*பூர்த்தி எனப்படும் வானவன் ஆம் உனைப் போற்றி உய்வான்*
*சேர்த்த பரிசுத்த நாமங்கள் ஆயிரம் செப்பியும் நல்*
*வார்த்தைகளானும் புகழ்வர் அன்றோ சிகி வாகனனே.*

மயில்வாகனனே! கடவுள் சொல்லாலும், நினைக்கும் மனத்தாலும் அளவிட முடியாத பூரணம் எனப்படும் தேவனாம் உனைத் துதித்து உய்தற்பொருட்டுத் தொகுத்துக் கூறப்பட்ட தூய உன் திருப்பெயர்கள் ஆயிரம் சொல்லியும் நல்ல வார்த்தைகளாலும் புகழ்வர் அல்லவா? 4

**நினைக்கு நினைப்புங் கருவி யியக்கமு நின்னனவந்**
**நினைப்பு மியக்கமு மென்னிற் கலக்குமொர் நீர்மையினில்**
**எனக்கொர் சுதந்திர முண்டாகிச் செய்த விருவினையாம்**
**வனத்திடை நின்று மயங்குகின் றேன்சிகி வாகனனே.**

*நினைக்கும் நினைப்பும் கருவி இயக்கமும் நின்னன அந்*
*நினைப்பும் இயக்கமும் என்னில் கலக்கும் ஓர் நீர்மையினில்*
*எனக்கு ஓர் சுதந்திரம் உண்டாகிச் செய்த இரு வினையாம்*
*வனத்துஇடை நின்று மயங்குகின்றேன் சிகிவாகனனே.*

மயில்வாகனனே! நினைக்கும் நினைப்பும், புறக்கருவிகளான மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்தும், மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் உட்கருவிகள் நான்கும் ஆகியவற்றின் இயக்கமும், இவ்வாறு அந்த நினைப்பும் இயக்கமும் என்னிடம் கலக்கும் தன்மையால், எனக்கு ஒரு சுதந்திரம் உண்டாகிச் செய்த நல்வினை, தீவினை ஆகிய இரண்டு வினைகளான காட்டிற்குள் நின்று மயங்குகின்றேன்! 5

**அறிவற்ற கன்மமு மென்றனைத் தேடி யடைவதின்று**
**பொறிகெட்ட நானு மதுகண்டு கோடற்குப் போவதின்று**
**குறிதிட்டங் கண்டதைக் கூட்டிப் புசிக்கக் குயிற்றுவது**
**வறிதற்ற நின்னருள் வல்லமை யேசிகி வாகனனே.**

*அறிவு அற்ற கன்மமும் என்றனைத் தேடி அடைவதுஇன்று*
*பொறி கெட்ட நானும் அதுகண்டு கோடற்குப் போவது இன்று*
*குறி திட்டம் கண்டு அதைக் கூட்டிப் புசிக்கக் குயிற்றுவது*
*வறிது அற்ற நின் அருள் வல்லமையே சிகிவாகனனே.*

மயில்வாகனனே! அறிவில்லாத கன்மமும் என்னைத் தானாகத் தேடிவந்து அடைவதில்லை; அறிவு கெட்ட நானும் அதனைக் (கன்மத்தை) கொள்வதற்குப் போவதில்லை; அடையாளமும் நிலையும் அறிந்து, அந்த வினையை அவற்றுடன் கூட்டி அனுபவிக்கச் செய்வது குறைவற்ற உனது அருளாற்றலேயாகும்! 6

**எந்நாளு மென்னைப் பிரியா யெனாவென் னிதயமதில்**
**அந்நாளி லுன்னை நினைபொழு தேயுண் டதற்கொருகே**
**டிந்நாளி லுற்றதன் றோவெளி யேனிதற் கென்னசெய்வேன்**
**மன்னார் பெருக்கி யருள்வா யருஞ்சிகி வாகனனே.**

*எந்நாளும் என்னைப் பிரியாய் எனா என் இதயம்அதில்*
*அந்நாளில் உன்னை நினைபொழுதே உண்டு அதற்குஒருகேடு*
*இந்நாளில் உற்றதுஅன்றோ எளியேன் இதற்கு என்ன செய்வேன்*
*மன் நார் பெருக்கி அருள்வாய் அரும் சிகிவாகனனே.*

அரிய மயில்வாகனனே! எந்நாளும் என்னைப் பிரியாய் என்று என் இதயத்தில் அக்காலத்தில் உன்னை நினைக்கும் பொழுதே அதற்கொரு கேடு உண்டு; அது இந்நாளில் நடந்துவிட்டதல்லவா? இதற்கு எளியேன் என்ன செய்வேன்? நிலையான அன்பைப் பெருக்கி அருள்வாயாக! 7

**பரபரப் பாநிலம் பொன்றேடு காதலும் பாழ்ஞ்சடரம்**
**விரிவெடுக் கச்சரு வுண்டூன் றிளைத்து விளைமதனக்**
**கரகரப் போடுபெண் டோளணை காதலுங் கைக்கொண்டநான்**
**வருபிறப் பெற்றற் குனையடுத் தேன்சிகி வாகனனே.**

*பரபரப்பா நிலம் பொன் தேடு காதலும் பாழ்ஞ்சடரம்*
*விரிவு எடுக்கச் சருஉண்டு ஊன்தின்று இளைத்து விளைமதனக்*
*கரகரப்போடு பெண்தோள் அணை காதலும் கைக்கொண்டநான்*
*வரு பிறப்பு எற்றற்கு உனை அடுத்தேன் சிகிவாகனனே.*

மயில்வாகனனே! பரபரப்பாக இப்பூமியில் மண், பொன்னைத் தேடும் ஆசையும், பாழான வயிறு பெருக்கச் சோற்றுணவையும் உண்டு திளைத்து, அதனால் உண்டாகும் காம மிகுதியால் மாதர் தோளைத் தழுவும் ஆசையும் கைக்கொண்ட நான், இனி வரப்போகும் பிறப்பை ஒழித்தற் பொருட்டு உன்னை அண்டினேன்! 8

**நித்த வனாதி யுனோடு விராவி நிறையுமுத்திக்**
**கொத்த வணக்கமெ னுள்ளக மன்றெனக் குப்புறம்பென்**
**றுத்தி பணற்கொரு ஞாயமு மில்லை யுரைத்தபடி**
**வைத்த குறிக்க ணெழுந்தரு ளாய்சிகி வாகனனே.**

*நித்த அனாதி உனோடு விராவி நிறையும் முத்திக்கு*
*ஒத்த வணக்கம் என் உள் அகம் அன்று எனக்குப் புறம்பு என்று*
*உத்திபணற்கு ஒரு ஞாயமும் இல்லை உரைத்தபடி*
*வைத்த குறிக்கண் எழுந்தருளாய் சிகிவாகனனே.*

மயில்வாகனனே! என்றுமுள்ள அனாதியாகிய உன்னுடன் இரண்டறக் கலந்து, முழுமையடையும் முத்திக்கு ஏற்ற வணக்கம் என் உள்ளம் அன்று, எனக்கு இந்த உள்ளம் புறம்பானது என்று நீ ஊகிப்பதற்கு எந்த நியாயமும் இல்லை! நீ சொன்னபடி வைத்த குறியில் எழுந்தருளாய்! 9

**பொன்னுக்கு மண்ணுக்கு மின்னுக்கு மாகப் பொருந்துமனந்**
**தன்னைக் கெடுத்திடல் வீடென்று தேராச் சழக்குநெஞ்சர்க்**
**குன்னைத் துதிக்கு நெறிகசப் பாமவ ரொட்டெனக்கேன்**
**வன்னிச் சிலைப்பெய ரோன்பர மாசிகி வாகனனே.**

பொன்னுக்கும் மண்ணுக்கும் மின்னுக்கும் ஆகப் பொருந்து மனம்
தன்னைக் கெடுத்திடல் வீடு என்று தேராச் சழக்கு நெஞ்சர்க்கு
உன்னைத் துதிக்கும் நெறி கசப்பு ஆம் அவர் ஒட்டு எனக்கு ஏன்
வன்னிச் சிலைப் பெயரோன்பரமா சிகிவாகனனே.

மயில்வாகனனே! பொன், மண், பெண் ஆகிய மூன்று ஆசைகளின் வயப்படும் மனம் தன்னைக் கெடுப்பதுதான், வீடுபேறு என்று தெளியாத பொய் மனத்தார்க்கு உன்னைத் துதிக்கும் நெறி மிகவும் கசக்கும்; அவர் தொடர்பு எனக்கு ஏன்? 10

(உலக நசையினர்க்குக் குமார பகவானைத் துதிக்குநெறி கசப்பாகும். அவர் நட்பை யான் விரும்பே னென்பது இப்பத்தாம் பாட்டில் வெளிப்படுகின்றதன்றோ).